LAOP. No. 79/2025 நாள் 25.02.2026

கோ.சா.1 சரவணராமானுஜம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**நில எடுப்பு அலுவலர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

சர்வே எண்.94/4 ல் கையகப்படுத்தப்பட்ட 0.02.10 ஹெக்டேர்ஸ் நிலத்திற்கான இழப்பீட்டுத் தொகை கோரி கோரிக்கை மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி இடம் கூட்டு பட்டா எண்.1178 மூலமாக வெங்கடகிருஷ்ணராமானுஜம், ராதாகிருஷ்ணன், சங்கரநாராயணன் ஆகியோருக்கு பாத்தியப்பட்டது என்று நாங்கள் கட்சி செய்கிறோம் என்றால் சரிதான். சர்வே எண்.94/4 ஐ பொறுத்து சேலம் இணை 3 சார்பதிவாளர் அலுவலகத்தில் 05.12.2006 தேதியில் பொது அதிகார ஆவணம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண்ணிற்கான வில்லங்க சான்றிதழ் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகின்றது.)

Uploaded on 25.02.2026